பாண்டிமாதேவியார். ‘‘மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை’’ என்று திருஞானசம்பந்தரால் பாராட்டப்பெற்றவர். இவர் இறைவனடி சேர்ந்த நாள் சித்திரை ரோகிணிநாள். சுந்தரரின் தாயாராகிய இசைஞானியார். இறைவனுக்கு உணவு படைத்த சிறுத்தொண்டர், திருத்தொண்டத்தொகை என்னும் அடியார் வரலாறு தோன்றக் காரணமாக இருந்த விறன்மிண்டர், சிவனடியார்களுக்குத் துணி துவைத்துக் கொடுத்துத் தொண்டாற்றிய திருக்குறிப்புத் தொண்டர் ஆகிய சிவனடியார் பெருமக்கள் இறைவனடி சேர்ந்தது சித்திரை மாதத்தில்தான். எனவேதான் இம்மாதத்தில் அவர்களின் குருபூசை விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.



திருநாவுக்கரசர்

வைணவ சமயத்தில் நம்மாழ்வாரைத் தவிர மற்றவரைப் பாடாத மதுரகவி ஆழ்வார் தோன்றியதும் சித்திரை மாதத்தில்தான். நம்மாழ்வார் திருவாய்மொழி பாடியவர். அவரைக் குருவாகக்கொண்டு உயர்ந்தவர் மதுரகவி ஆழ்வார்.



மதுரகவி ஆழ்வார்

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்தவர் வள்ளல் பெருமான் என்னும் இராமலிங்க அடிகளார். ‘‘அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை’’ என்னும் தாரக மந்திரத்தை முழக்கி, ஆன்மநேய ஒருமைப் பாட்டையும், சமரச சுத்த சன்மார்க்க நெறியையும் போதித்த இராமலிங்கர் தோன்றிய நட்சத்திரம் சித்திரை ஆகும்.

இப்போதுள்ள ஆண்டுப்பிறப்பின் தொடக்க மாதமாகச் சித்திரை இருப்பதால் சித்திரை முதல் நாளை புத்தாண்டுப்பிறப்பு நாளாகக் கருதி ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டும், ஆண்டுப்பலன் கூறும் பஞ்சாங்கம் படிக்கக் கேட்டும், மங்கல நிகழ்ச்சிகளில் ஈடுபட்டும், மங்கலப்பொருள்களைக் கண்டு மகிழ்ந்தும் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். இந்நேரத்தில் சித்திரை பற்றி இலக்கணம், இலக்கியம், சமுதாய வழக்கு, சமய நூல்கள், புரணங்கள் கூறும் செய்திகள் சிலவற்றை நினைவுகூர்ந்து சிந்திப்போமாக.



இராமலிங்க அடிகளார்

# Chinese New Year Cheer

Eighty eight students from Saraswathy Kindergarten (SKG) brought festive cheer and joy as they celebrated Chinese New Year with under privileged senior citizens residing in Toa Payoh. The event was organised with the support of Toa Payoh South CC and Darma Muneeswaran Temple. SKG students performed various song and dance items for the guests and distributed goodie bags and mandarin oranges. Sarawathy Kindergarten has developed a new program involving its students in community service projects.

